உடனடி வெளியீட்டுக்காக

**ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது மே மாதம் 19 மற்றும் 22 தேதிகளில் டென்னிஸ் மைதானம், பிக்கிள்பால் மைதானம் மற்றும் பீல் வில்லேஜ் கோல்ஃப் வெளிகளை மீண்டும் திறக்கவிருக்கிறது.**

ப்ராம்ப்ட்டன், ON (மே 15, 2020) – சில பொழுதுபோக்கு வசதியமைப்புக்களை மீண்டும் திறக்கலாம் என்று ஒன்ட்டேரியோ அரசாங்கம் அறிவித்திருக்கிறபடியால், ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது திறந்த வெளி டென்னிஸ் மற்றும் பிக்கிள்பால் விளையாட்டு மைதானங்களை மே 19, செவ்வாய்க்கிழமையன்றும் மற்றும் பீல் வில்லேஜ் கோல்ஃப் திறந்த வெளியை மே 22 வெள்ளிக்கிழமையன்றும் திறக்கவிருக்கிறது. அனைத்து வருகையாளர்கள் மற்றும் நகரின் பணியாளர்கள் ஆகியோரின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக, உடல்ரீதியான சமூக விலகல் மற்றும் தூய்மையான தன்மைக்கான நடவடிக்கைகள் செயல்பாட்டில் இருந்து வரும்.

**திறந்தவெளி டென்னிஸ் மற்றும் பிக்கிள்பால் விளையாட்டு மைதானங்கள்**

நகர நிர்வாகமானது 21 திறந்த வெளி டென்னிஸ் மைதானங்கள் மற்றும் 7 பிக்கிள்பால் விளையாட்டு மைதானங்களை மே 19, செவ்வாய்க்கிழமையன்று மீண்டும் திறக்கவிருக்கிறது, இந்த மைதானங்கள் திங்கள் முதல் ஞாயிறு வரை திறந்திருக்கும். முற்பகல் 1 மணிக்கு முன்னர் இந்த மைதானங்கள் மூத்த குடிமக்களுக்கு மட்டுமே கிடைக்கப்பெறும்.

உடல் ரீதியான சமூக விலகல் நடவடிக்கைகளுக்கு இணக்கமாக இருப்பதற்காக, ஒரு சமயத்தில் பக்கத்திற்கு ஒருவர் என்ற வகையில் இரண்டு வீரர்களுக்கு மேல் ஒரு மைதானத்தில் அனுமதிக்கப்படமாட்டார்கள். வீரர்கள் எல்லா நேரங்களிலும் மற்றவர்களிடமிருந்து இரண்டு மீட்டர் (ஆறு அடி) தூரம் விலகி இருப்பதை கடைப்பிடிக்க வேண்டும். உடல் ரீதியான சமூக விலகல் தூரத்தை கடைப்பிடிக்காதவர்கள் வெளியேறும்படி கூறப்படுவார்கள்.

ஒவ்வொருவரின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக பின் வரும் விதிகள் கடைப்பிடிக்கப்படும்:

- முதலில் வருபவருக்கே முதலிடம் என மைதானத்தில் அனுமதிக்கப்படுவார்கள், மற்றவர்கள் காத்திருக்க வேண்டி நேரும் என்பதால் விளையாடுபவர்கள் 60 நிமிட நேரம் மட்டுமே விளையாட அனுதிக்கப்படுவார்கள்,
- ராக்கெட் மட்டை மற்றும் இதர சாதனங்களை ஒருவருக்கு ஒருவர் பரிமாறிக்கொள்ள வேண்டாம்
- குறிப்பிட்ட ஒருவரின் பந்துகளை மற்றவர்கள் தவறிப்போய் தொட்டுவிடாதிருக்க அவற்றில் குறியிடப்பட வேண்டும்

- வெளிப்புற கழிப்பறைகள் இந்த சமயத்தில் கிடைக்கப்பெறும் (இந்த வசதிகள் ஏற்கெனவே இருந்தால்)
- பார்வையாளர்கள் எவருக்கும் அனுமதியில்லை

டென்னிஸ் அல்லது பிக்கிள்பால் மைதானத்தை தேர்ந்தெடுக்க வருகை தரவும்: www.brampton.ca/parks. ஏதேனும் பிரச்சனை பற்றி புகாரளிக்க, 311 ஐ அழைக்கவும்.

**பீல் வில்லேஜ் கோல்ஃப் திறந்தவெளி**

29 ஏ, ஹார்ட்ஃபோர்ட் டிரெயில் இல் அமைந்துள்ள பீல் வில்லேஜ் கோல்ஃப் திறந்த வெளியை மே மாதம் 22, வெள்ளிக்கிழமையன்று, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் மீண்டும் திறக்கும். இந்த திறந்த வெளியானது வானிலை அனுமதிக்கும் பட்சத்தில் தினமும் காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை திறந்திருக்கும். மூத்தகுடிமக்களுக்கான நேரம்: நேரம் காலை 7 மணி முதல் 11 மணி வரை.

உடல் ரீதியான சமூக விலகல் நடவடிக்கைகளுக்கு இணக்கமாக இருக்கும் வகையில், வீரர்கள் எல்லா சமயங்களிலும் ஒருவருக்கு ஒருவர் இரண்டு மீட்டர் (ஆறு அடி) இடைவெளி விட்டு இருக்க வேண்டும். உடல் ரீதியான சமூக விலகலை கடைப்பிடிக்காதவர்கள் வெளியேறும்படி கூறப்படுவார்கள்.

கோல்ஃப் மைதானத்தில் அனைவரின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் உறுதிசெய்ய நகர நிர்வாகம் கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது; அவற்றில் அடங்குபவை:

- திறந்த வெளி எங்கிலுமாக கைகழுவும் நிலையங்கள் மற்றும் ஹாண்ட் சானிட்டைஸர் வழங்குதல்
- வாகனம் நிறுத்தும் இடம் மற்றும் கிளப் ஹவுஸ் கட்டிடம் சுற்றிலுமாக கோல்ஃப் விளையாடுபவர்களுக்காக பாதுகாப்பான நடமாட்டத்தை உறுதி செய்ய பெயர் அட்டைகள் மற்றும் அம்புக்குறியிட்ட அறிவிப்பு பலகைகள் நிறுவுதல்
- ஒரு சமயத்தில் இரண்டு வீரர்கள் மட்டுமே, மற்றும் ஒரு கோல்ஃப் வண்டிக்கு ஒருவர் என்ற வகையில் கட்டுப்படுத்தல்
- தனியொருவர் ஆட்டம் துவங்கும் (tee off )நேரங்களுக்கு இடையில் இடைவேளை நேரத்தை 20 நிமிடங்களாக அதிகரித்தல்
- வசதியமைப்புக்களில், மேம்படுத்தப்பட்ட வகையில் மற்றும் மிகவும் அடிக்கடி தூய்மைப்படுத்தலை நடைமுறைப்படுத்தல், கோல்ஃப் வண்டிகள் மற்றும் குளியலறைகளில் கிருமி நீக்கம் செய்வதும் இதில் அடங்கும்.

- ”தொட்டுக்கொள்ளாமல் விளையாடுவதை” உறுதி செய்வதற்காக பங்கர் ரேக்குகளை அகற்றுதல் மற்றும் ”கோல்ஃப் கப்” களை உயரத்தில் வைத்தல்
- நகர நிர்வாகம் விதித்த உடல்ரீதியான சமூக விலகலுக்கான முயற்சிகளை கடைப்பிடிக்காமல் இருப்பதைத் தடுக்கு முகமாக கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகளை அறிமுகம் செய்தல்

இந்த சமயத்தில், கோல்ஃப் மைதான நிர்வாகம் குழுக்களுக்கான முன்பதிவு செய்தல், போட்டிகளை நடத்துதல் அல்லது கற்றுக்கொடுத்தல் பாட வகுப்புக்களை வழங்காது

குடியிருப்புவாசிகள் தங்களுக்கான பந்து அடிக்கத் துவங்குவதற்கான நேரத்தை(tee times) முன்கூட்டியே 905.874.2995, என்ற எண்ணிற்கு அழைத்து பதிவு செய்து கொண்டு, மைதானத்திற்கு வரும்போது ஆன்லைனில் பணம் செலுத்தலாம். மே 19 செவ்வாய்க்கிழமை மாலை 1 மணி முதல் தொலைபேசி இணைப்புகள் வேலை செய்யும். நேரடி சேவை வழங்கப்படாது. விளையாடுபவர்கள் தங்களுக்கு திட்டமிடப்பட்ட பந்து அடிக்க துவங்கும் நேரத்திற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வந்து கிளப்ஹவுஸில் உள்ள வரவேற்பு பகுதிக்கு நேரடியாகச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கட்டுப்பாடுகள் இருக்கும்போது குறைக்கப்பட்ட கட்டணவிகிதம் அமலில் இருக்கும். கோல்ஃப் மைதானத்தில் 'ஆடைக் கட்டுப்பாடு' நடைமுறையில் உள்ளது.

கிளப்ஹவுஸ் மற்றும் புரோ ஷாப் (கோல்ஃப் விளையாட்டு பொருட்கள் விற்பனை செய்யுமிடம்) ஆகியவை மூடப்பட்டிருக்கும், மேலும் இழுத்துச் செல்லக்கூடிய வண்டிகள் மற்றும் கிளப் வாடகை பொருட்கள் வாடகைக்கு வழங்குவது அடுத்து அறிவிக்கப்படும் வரை தற்காலிகமாக நிறுத்தப்படும். வெளிப்புற ஓய்வறைகளை விளையாட்டுக்கு முன்னும் பின்னும் விளையாடுபவர்கள் உபயோகித்துக் கொள்ளலாம். இந்தச் சமயத்தில் உணவு மற்றும் பானங்கள் எவையும் விற்பனையில் வாங்கக் கிடைக்காது, மேலும் விளையாடுபவர்கள் தங்கள் சொந்த குடிநீர் மற்றும் மது அல்லாத பானங்களை கொண்டு வருவது வரவேற்கப்படுகிறது.

பீல் வில்லேஜ் கோல்ஃப் கோர்ஸ் என்பது ஒன்பது துளைகள் கொண்ட பொது கோல்ஃப் மைதானமாகும், இது ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்திற்கு சொந்தமானது மற்றும் அதனால் இயக்கப்படுகிறது. COVID-19 தொற்று பரவல் பேரிலான நடவடிக்கைகள் மற்றும் பரிசீலனைகள் பற்றிய முழு விவரங்கள் உட்பட விளையாட்டு முன்பதிவுக்கான முழுமையான வழிகாட்டியானது, ஆன்லைனில் www.brampton.ca/peelvillagegolf வலைத்தளத்தில் கிடைக்கிறது.

**நகரை மீண்டும் திறக்கவும் மீட்சி பெறச் செய்வதற்குமான மேற்கொண்டு திட்டங்கள் பற்றிய கருத்துக்கள் நகரவாசிகளிடமிருந்து நகர நிர்வாகம் எதிர்பார்க்கிறது**

நகரத்தினை மறு திறப்பு செய்து மீட்சி பெறச்செய்வதற்கான மேயரின் குழுவானது, பொதுமக்கள் மற்றும் ஊழியர்களின் சேவை மற்றும் பாதுகாப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதிசெய்யும் பொருட்டு தனது சமூக ஈடுபாட்டை நகர நிர்வாகம் தொடங்கியுள்ளது. குறிப்பிட்ட பயனர் குழுக்கள், வணிகங்கள் மற்றும் சமூக குழுக்கள் ஆகியோருடன் தொடர்ச்சியான ஆலோசனைகள் செய்வது இதில் அடங்கும். இந்த வாரத்தில் நகர நிர்வாகமானது விளையாட்டுக் குழுக்களுடன் ஒரு சந்திப்பை நடத்தியது, மற்றும் அடுத்த வாரத்தில், மூத்தகுடிமக்களுக்கான குழுக்களுடன் கலந்தாலோசிக்கும். ஆன்லைனில் இங்கே கிடைக்கின்ற ஒரு கருத்தாய்வில் பங்கேற்பதன் மூலமாகவோ அல்லது

covid19reopencity@brampton.ca என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்வதன் மூலமாகவோ ப்ராம்ப்ட்டன் சமூகத்தினர் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள அழைக்கப்படுகிறார்கள்.

கோவிட் -19 (COVID-19) தொற்று பரவலை எதிர்கொள்வதற்கான மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/COVID19.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ நமது நகரின் கோல்ப் மைதானம் உள்ளிட்ட கூடுதல் சேவைகளை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் கிடைக்கப்பெறச் செய்கையில், பயனர் பாதுகாப்பையே முதன்மையானதாகவும் முக்கியமானதாகவும் கருதும் வகையில் அதனை நாங்கள் கவனமாக செய்கிறோம். ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான ஒரு நகரமாக இருக்க வைப்பதுடன், நமது குடியிருப்பாளர்கள் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை பேணி வருவதைக் கண்டு நாங்கள் பரவசமடைகிறோம்; மேலும் குடியிருப்பாளர்கள் நம்பியுள்ள இந்த சேவைகளை பாதுகாப்பாக மீண்டும் திறந்துவிடத் தேவையான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்து வருகிறோம்.”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ இந்த வாரம் நகரத்தினை மறு திறப்பு செய்து மீட்சி பெறச்செய்வதற்கான மேயரின் குழுவானது, நகரத்தின் விளையாட்டுக் குழுக்களிடமிருந்து நேரடியாக பேச்சு நடத்தியது; அவற்றைக் கேட்டு பாதுகாப்பான அணுகுமுறையுடன் நகரத்தின் விளையாட்டு மைதானங்கள் மற்றும் கோல்ஃப் திறந்த வெளியை மீண்டும் திறந்துவிடுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். நாங்கள் இந்தப் பணியில் ஒன்றாக இருக்கிறோம், மற்றும் நாங்கள் நகர சேவைகளை மீண்டும் தொடங்கி எங்கள் நகரத்தை மீண்டும் திறந்துவிடும்போது பீல் பப்ளிக் பொது சுகாதார ஆலோசனையையும் பின்பற்றுவோம்

- *மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4; தலைவர், மீண்டும் திறந்துவிடுதல் மற்றும் மீட்சி பெறுவதற்கான பணிக்குழு*

“ ப்ராம்ப்ட்டன் மற்றும் அதன் ஊழியர்களாகிய எங்களுக்கு, நகருக்கான சேவைகள் மற்றும் வசதிகள் ஆகியவற்றில் பாதுகாப்புதான் ஒரு முன்னுரிமை கொண்ட விஷயமாகும். நகரின் சேவைகளை பொதுமக்களுக்கு மீண்டும் அளிக்கையில் அதனை பொறுப்புடனும், மற்றும் பாதுகாப்பாக மீண்டும் கொடுப்பதையும் உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை நாங்கள் தொடர்ந்து மேற்கொள்வோம்”.

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca